**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 10.08.2026**
**OS. No. 278/2013**
**வழக்கு சாட்சி DW.1–செல்லப்பன், த/பெ.கருப்பண்ணன்**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

1) நான் அத்தியப்பன் காட்டுவளவில் தற்போது குடியுள்ளேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். 2, 3 பிரதிவாதிகள் என் சகோதர, சகோதரிகள் என்றால் சரிதான். அவர்களுக்கும் சேர்த்து தான் நான் சாட்சியம் அளிக்கிறேனா என்றால் ஆமாம். வாதிகள் எனக்கு தூரத்து உறவு மற்றும் பங்காளிகள் முறை வேண்டும்.என் தந்தையும், வாதிகளின் தந்தையும் உடன் பிறந்த சகோதரர்கள் என்றால் சரிதான். அவ்வாறெனில் நான் வாதிகள் என் தூரத்து உறவினர் என்று சொல்வது தவறு என்றால் சரிதான். என் தாத்தா பெயர் சேமலைகவுண்டர் ஆகும்.

2) என் தாத்தாவிற்கு மொத்தம் நான்கு பிள்ளைகள், அவர்கள் பெயர்கள் என் தந்தை கருப்பண்ணன், முத்தப்பன், செங்கோடன், ஆரப்பன் ஆகும். மேற்படி செங்கோடன் மற்றும் ஆரப்பன் ஆகியோர்கள் தற்போது கொளத்தூரிலுள்ள ஆலமரத்துபபட்டி கிராமத்தில் உள்ளார்கள் என்றால் சரிதான். அவர்களுக்கு விவசாய நிலங்களும் அங்கு தான் உள்ளது என்றால் சரிதான். எனக்கும், வாதிகளுக்கும் வீரக்கல் கிராமத்தில் விவசாய நிலங்கள் உள்ளது என்றால் சரிதான்.தாவா சொத்துக்களை என் தாத்தா சேமலைகவுண்டர் தான் விலைக்கு பெற்றார் என்றால் சரிதான், 1957 ல் கிரையம் பெற்றுள்ளார்.

3) நான் சொல்வது தவறு என்றும், வா.சா.ஆ.1 ஆவணத்தின்படி 1958 ல் தான் கிரையம் பெற்றார் என்றால் 1957 ல் தான் கிரையம் பெற்றதாக எனது ஊரில் சொன்னார்கள். அந்த சொத்துக்களின் சர்வே எண்கள் தெரியுமா என்றால் ச.எண்.73/3 ஆகும். நான் சொல்வது தவறு என்றும் என் தாத்தா சேமலைகவுண்டர் 6 ஏக்கர் 52 சென்ட் நிலத்தை

கிரையம் பெற்றார் என்றும், அப்பொழுது அதன் சர்வே எண்.209 என்றால் சரிதான். பின்னிட்டு 1962ல் தாவா சொத்திற்கு சுமார் 1கி.மீ வடக்குபுறத்தில் என் தாத்தா சேமலைகவுண்டர் நானும், வாதிகளும் குடியிருக்கும் நிலத்தை கிரையம் பெற்றார் என்றால் சரிதான். நாங்களும், வாதிகளும் தனிப்பட்ட முறையில் எந்த சொத்தும் கிரையம் பெறவில்லை என்றால் சரிதான்.

4) என் தாத்தா சேமலைகவுண்டர் உயிருடன் இருந்த காலத்திலேயே என் தந்தைக்கும், வாதிகளின் தந்தைக்கும் வாய்மொழியாக பாகபிரிவினை செய்து கொடுத்தார் என்றால் சரிதான். மேற்படி பாகபிரிவினையின் போது தாவா சொத்தான ச.எண்.209 ஆனது நான்கு உட்பிரிவுகளாக பிரிக்கப்பட்டு ரீ சர்வே காலத்திற்கு முன்பே அவரவர்கள் பெயருக்கு பட்டா வழங்கப்பட்டுவிட்டது என்றால் சரிதான். பாகபிரிவினை பத்திரம் எதுவும் எழுதி கொள்ளாமல் பட்டாபடி அவரவர்கள் சொத்துக்களை அனுபவித்து வருகிறோம் என்றால் சரிதான்.

5) மேற்படி வாய்மொழியாக பாகம் பிரிக்கப்பட்டபோது ச.எண்.209/1, 209/3 ஆகியவை என் தந்தைக்கு பிரித்து கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். வாதிகளுக்கு ச.எண்.209/4ல் சொத்து வழங்கப்பட்டது என்றால் சரிதான். ச.எண்.209/1 மற்றும் 209/3க்கு இடையே மல்லப்பனூர் – நங்கவள்ளி செல்லும் தார் ரோடு செல்கிறது என்றால் சரிதான். அந்த தார் சாலையானது ச.எண்.209/2 என உட்பிரிவு செய்யப்பட்டு, மறு அளவு செய்த காலத்திலிருந்தே செல்கிறது என்றால் சரிதான். அந்த தார் ரோடு சுமார் 5சென்ட் இருக்கும் என்றால் அளவுகள் எனக்கு தெரியவில்லை. ச.எண்.209/4 ஆனது ச.எண்.209/3 க்கு கிழக்குபுறமாக அமைந்துள்ளது என்றால் சரிதான்.

6) மேற்படி ச.எண்.209ல் உள்ள 6 ஏக்கர் 52சென்ட் நிலத்தில் எங்களுக்கு 3ஏக்கர் 42சென்ட் நிலம் வாய்மொழியாக பாகம் பிரித்து கொடுக்கப்பட்டது, வாதிகளுக்கு எவ்வளவு நிலம் கொடுக்கப்பட்டது என்று தெரியவில்லை. நான் சொல்வது தவறு என்றும் எங்களுக்கு 3ஏக்கர் 61சென்ட் நிலமும், வாதிகளுக்கு 2ஏக்கர் 77சென்ட் நிலமும் வாய்மொழியாக பிரித்து கொடுக்கப்பட்டது என்றால் எனக்கு சரியாக

தெரியவில்லை. வாதிகளுக்கு பிரிக்கப்பட்ட நிலத்தை விட எங்களுக்கு கூடுதலாக நிலம் பிரித்து கொடுக்கப்பட்டது என்றால் எனக்கு தெரியவில்லை, ஆனால் எங்களுக்கு அவர்களை விட கொஞ்சம் அதிகமாக உள்ளது.

7) நான் பொய்யாக சொல்கிறேன் என்றும், உண்மையாகவே வாதிகளை விட எங்களுக்கு நிலம் கூடுதலாக தான் வழங்கப்பட்டது என்றால் எனக்கு தெரியவில்லை. மேற்படி தார் ரோட்டிலிருந்து கிழக்காக ச.எண்.209/3 வழியாக தான் வாதிகள் ச.எண்.209/4 க்கு செல்ல தடவழி பாத்தியம் உள்ளது என்றால் இல்லை, இதுவரை அவ்வாறு அவர்கள் வந்ததில்லை. என் தாத்தா சேமலைகவுண்டர் நிலத்தை பிரித்து போதே அவ்வாறு தான் அவ்வாறு தான் தடவழி பிரிக்கப்பட்டது என்றும், அதை தான் வாதிகள் பயன்படுத்தி வந்தார்கள் என்றும், நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

8) என் தாத்தா சேமலைகவுண்டர் வாய்மொழியாக பிரித்த காலத்திலிலேயே தடவழி பிரித்து கொடுக்கப்பட்டது என்றும், அதற்கு எவ்வித ஆவணமும் இல்லாததால் நான் அதை மறுக்கிறேன் என்றால் சரியல்ல, என் தாத்தா பிரித்து கொடுத்தது எனக்கு தெரியாது. எனக்கு அனைத்து விவரங்களும் தெரியும் என்றும், வாதிகளின் தந்தை, பிரதிவாதிகளாகிய எங்களின் தந்தை ஆகியோர்களும், தற்போது வாதிகளும், பிரதிவாதிகளாகிய நாங்களும் அந்த தடவழியை தான் பயன்படுத்தி வருகிறோம் என்றால் சரியல்ல. தென்வடலாக செல்லும் தார் ரோட்டிற்கு கிழபுறமாக ச.எண்.209/3 ன் வழியாக 12 அடி அகலத்திலும், 142 மீ நீளத்திலும் வாதிகளின் நிலமான ச.எண்.209/4 வரை சென்றடைகிறது என்றால் சரியல்ல.

9) மேற்படி பாதையை பார்வையிட நீதிமன்ற ஆணையர் நியமிக்கப்பட்டு, அவர் மேற்படி பாதையை பார்வையிட்டு, அவர் அறிக்கையும் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் நீதிமன்ற ஆணையர் வரைபடத்தில் மேற்படி தடவழி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் நான் படிக்காததால் எனக்கு அது தெரியவில்லை. நீதிமன்ற ஆணையர் வரைபடத்தில் தெளிவாக வாதிகளின் நிலம் வரை தடவழி

செல்வது காண்பிக்கப்பட்டுள்ளது என்றும், ஆனால் நான் வேண்டுமென்றே அதை மறுக்கிறேன் என்றால் சரியல்ல. தற்போது தடவழி இல்லை என்றும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

10) என்னிடம் காட்டப்படும் ஆவண எண்.1275/1962ன் படி தான் என் தாத்தா சேமலைக்கவுண்டர் நாங்கள் தற்போது குடியுள்ள நிலத்தை கிரையம் பெற்றார் என்றால் எனக்கு தெரியவில்லை. அந்த நிலத்தில் தான் நானும், வாதிகளும் தனித்தனியாக வீடு கட்டி வசித்து வருகிறோம் என்றால் சரிதான். அந்த நிலத்தையும் வாய்மொழியாக ஆவணங்கள் எதுவும் எழுதி கொள்ளாமல் பிரிக்கப்பட்டு, அனுபவம் செய்து வருகிறோம் என்றால் சரிதான். அந்த பகுதியும் மல்லப்பனூர் – நங்கவள்ளி செல்லும் தார் ரோட்டிற்கு கிழக்குபுறமாக தான் உள்ளது என்றால் சரிதான். அந்த நிலத்திற்கும், தாவா சொத்திற்கும் சுமார் 3/4 கி.மீ தொலைவு இருக்கும்.

11) மேற்படி நிலத்தில் எங்களுடைய பகுதிக்கு தெற்குபுறமாக பைப் லைன் செல்கிறது என்றால் சரியல்ல, எங்களது நிலத்திற்கு இடையில் செல்கிறது. மேற்படி சொத்திற்கு தார் ரோட்டிலிருந்து குடிநீர் பைப் லைனுக்காக ஒதுக்கப்பட்ட தடவழி வழியாக தான் நாங்கள் சென்று வருகிறோம் என்றால் சரிதான். வாதிகளுக்கு தார் ரோட்டிலிருந்து கிழபுறமாக உள்ள எங்களது நிலமான ச.எண்.209/3ன் வழியாக மட்டுமே ச.எண்.209/4க்கு சென்றடைய முடியும் என்றும், அவர்களுக்கு வேறு மாற்றுப்பாதை இல்லை என்றால் சரியல்ல, எனக்கு நினைவு தெரிந்ததிலிருந்து மூர்த்தி, சென்னியப்பன், ஏழுமலை ஆகியோரது நிலங்களின் வழியாக தான் வாதிகள் பல காலமாக சென்று வருகிறார்கள். மேற்படி நபர்கள் எங்கள் உறவினர்களா என்றால் ஆமாம், மாமன், மைத்துனர்கள் முறை வேண்டும். மேற்படி நபர்களின் நிலம் தான் தாவா சொத்தான ச.எண்.209க்கும், என் தாத்தா 1962ல் கிரையம் பெற்ற நிலத்திற்கும் இடையே அமைந்துள்ளது. மேற்படி நபர்கள் தாவா சொத்திற்கு மூன்றாம் நபர்கள் என்றால் சரிதான்.

12) ச.எண்.209/4க்கு வடக்குபுறம் மேற்படி நபர்களின் நிலம் உள்ளது. மேற்படி நபர்கள் மூன்றாம் நபர்கள் என்றும், அவர்கள் நிலத்திற்கும், தாவா சொத்திற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றும், வாதிகள் அவ்வாறு ஒரு பாதையை எந்த காலத்திலும்

பயன்படுத்தியதில்லை என்றால் சரியல்ல. என் தாத்தா சேமலைகவுண்டர் என் தந்தைக்கும், வாதிகளின் தந்தைக்கும் வாய்மொழியாக பாகம் பிரித்து கொடுத்த காலத்திலிருந்தே வாதிகள் தார் ரோட்டிற்கு கிழபுறமுள்ள எங்கள் நிலத்தின் வழியாக தான் அவர்கள் நிலத்திற்கு சென்று வருகிறார்கள் என்றால் சரியல்ல. ஆவணங்கள் இல்லாத ஒரே காரணத்திற்காக அதை தடை செய்து வருகிறோம் என்றால் சரியல்ல.

13) ச.எண்.212 ல் கூட்டாக எங்களுக்கும், வாதிகளுக்கும் கிணறு இருந்தது, அங்கே பிய்யமரம் இருந்தது என்றும், அதை வாதிகள் அறுத்துவிற்றுவிட்டனர், அதனால் புகார் கொடுத்து அதன் ரசீதை தான் நான் தாக்கல் செய்தேன். இந்த வழக்கு தாக்கல் செய்த பிறகு தான் அவர்கள் நிலத்திலுள்ளதாக சொல்லி மேற்கண்ட மரத்தை அறுத்துவிற்றுவிட்டனர், அதனால் அந்த ரசீதை தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தாக காட்டப்பட்டுள்ள நிலத்தை பொறுத்து அந்த புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது தவறு என்றும், வாதிகள் அவர்களது நிலத்திலுள்ள மரத்தை தான் வெட்டினார்கள் என்றும், அவர்கள் மீதுள்ள கால்புணர்ச்சி காரணமாக அவர்கள் மீது நாங்கள் பொய்யாக புகார் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல.

14) எந்த தேதியில் மேற்படி புகாரை நான் கொடுத்தேன் என்றால் தெரியவில்லை, சுமார் 6 மாதங்கள் இருக்கும். 09.07.2021 ம் தேதியில் வாதிகள் எங்கள் மீது புகார் கொடுத்து, அதன் பேரில் காவல் நிலையத்தில் ரசீதும் வழங்கப்பட்டுள்ளது என்றால் காவல் நிலையத்தில் எங்களை அழைத்து விசாரிக்கவில்லை. பின்னர் 12.01.2022 ல் மீண்டும் பொதுவழியில் நாங்கள் பிரச்சனை செய்ததால் எங்கள் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல, இதுவரை வாதிகள் புகார் கொடுத்ததாக எங்களை அழைத்து விசாரிக்கவில்லை, நாங்கள் புகார் கொடுத்தது சம்மந்தமாக தான் அழைத்து விசாரித்துள்ளார்கள். நான் சொல்வது தவறு என்றும், பலமுறை நாங்கள் தான் வாதிகளுக்கு பிரச்சனை செய்து, இது தொடர்பாக வாதிகளும் புகார் கொடுத்து எங்களைவிசாரித்தார்கள் என்றும், நான் வழக்கிற்காக இல்லை என்று மறுக்கிறேன் என்றால் சரியல்ல.

15) எந்த தேதி, எந்த வருடம் எங்கள் சொத்தை அபகரிக்க வாதிகள் முயற்சி செய்ததாக என் நிரூபண வாக்குமூலத்தில் நான் சொல்லியுள்ளேன் என்றால் தற்போது வரை

செய்து வருகிறார்கள். இந்த வழக்கு நிலுவையிலுள்ள சமயத்தில் வழக்கு சொத்து சம்மந்தமாக நானும், 2ம் பிரதிவாதியும் பாகம் பிரித்து கொண்டோமா என்றால் ஆமாம். அதேபோல் 1962ல் என் தாத்தா கிரையம் பெற்று எங்களுக்கு பாங்காக வந்த சொத்தையும் நாங்கள் பாகம் பிரித்து கொண்டோம் என்றால் சரிதான். அவ்வாறு பாகம் பிரிந்த சொத்தை நான் என் மனைவி பெயரிலும், 2ம் பிரதிவாதிக்கு பிரிந்த சொத்தை அவர் அவரது மனைவி பெயரிலும் எழுதி வைத்துவிட்டோம் என்றால் சரிதான். எழுதி கொடுத்து சுமார் 1 வருடம் இருக்கும். என்னிடம் காட்டப்படும் ஆவணங்கள் தான் நானும், 2ம் பிரதிவாதியும் அவரவர்கள் மனைவிகள் மீது 28.10.2025ல் எழுதி வைத்த கிரைய ஆவணங்கள் என்றால் சரிதான்.

16) நான் என் மனைவி மீது எழுதி வைத்த ஆவணத்தின் **சான்றிட்ட நகல் வா.சா.ஆ.6** ஆகவும், 2ம் பிரதிவாதி அவரது மனைவி மீது எழுதி **வைத்த ஆவணம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.7** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. வாதிகளுக்கு பாதையை மறுக்கவேண்டும் என்பதற்காக தான் மேற்கண்டவாறு மோசடியாக ஆவணங்கள் எழுதி வைத்துள்ளோம் என்றால் சரியல்ல. வாதிகள் தாவா பாதையை தான் விவசாயம் செய்வதற்கும், விவசாய பொருட்கள் கொண்டு சென்று வருவதற்கும் பயன்படுத்தி வருகிறார்கள் என்றும், நான் வேண்டுமென்றே அதை மறுக்கிறேன் என்றும், வாதிகளின் அந்த தடவழியை மறுக்க எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றும், அதற்கு நான் எவ்வித ஆட்சேபணையும் தெரிவிக்க இயலாது என்றால் சரியல்ல. அதனால் வாதிகள் தாக்கல் செய்த வழக்கு அவர்கள் கோரியவாறு செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்படவேண்டும் என்றால் சரியல்ல.

ஒம்/−திரு. M.செல்வம்,<br>
மாவட்ட உரிமையியல் நீதிபதி,<br>
மேட்டூர்.